செய்தி வெளியீடு எண். 68/2017 நாள்: 22.09.2017

**விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக, தேசிய தோட்டக்கலை இயக்கம் 2017-18 திட்டத்தின்கீழ், மானிய விலையில் பவர் டில்லர்கள் மற்றும் மினி டிராக்டர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் விவசாயிகளுக்கு வழங்கினார்.**

*****

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக, தேசிய தோட்டக்கலை இயக்கம் 2017-18 திட்டத்தின்கீழ், மானிய விலையில் பவர் டில்லர்கள் மற்றும் மினி டிராக்டர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.09.2017) விவசாயிகளுக்கு வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், இன்றைய தினம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தோட்டக்கலைத்துறையின் சார்பாக தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம் 2017-18-ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட இலக்கீட்டில் இயந்திரங்கள் பயன்பாடு இனத்தின்கீழ் 4 விவசாயிகளுக்கு 25% மானியத்தில் மினி டிராக்டர் ரூ.2,88,748/- மதிப்பீட்டிலும், 12 விவசாயிகளுக்கு 40% மானியத்தில் ரூ.7,15,200/- மதிப்பீட்டில் பவர்டில்லரும் ஆக மொத்தம் ரூ.10,03,948/- மதிப்பிலான இயந்திரங்களை 10 வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி.பொ.மணிமொழி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.செல்வராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.செல்வசேகர், தோட்டக்கலை அலுவலர்கள் திரு.வெங்கடேசன், செல்வி.விஷ்ணுபிரியா, உதவி திட்ட அலுவலர் திரு.மணிகண்டன் மற்றும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.